04.02.16

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இயற்கை உரம் தயாரிப்புக்கு டன்னுக்கு ரூ.1,500 மானியம்

இயற்கை முறையில் தயாரிக்கப்படும் உரத்திற்கு டன்னுக்கு ரூ.1,500 மானியம் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக மத்திய அமைச்சர் அனந்த்குமார் தெரிவித்தார்.

பெங்களூரில் புதன்கிழமை தொடங்கிய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் அவர் பேசியதாவது:

கர்நாடகத்தில் முதலீடுகளை அதிகரிக்க மாநில அரசுடன், பிரதமர் நரேந்திர மோடி தலையிலான மத்திய அரசு உறுதுணையாக இருக்கும். கர்நாடகத்தில் தொழில் தொடங்குவோருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய மத்திய அரசு தயாராக உள்ளது.

வட கர்நாடகத்தில் ரூ.13 லட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட யூரியா தொழில்சாலை அமைக்கப்படும். ரூ.12,000 கோடி மதிப்பில் யூரியா இறக்குமதி செய்யப்படுகிறது. பிளாஸ்டிக் உள்ளிட்ட பல்வேறு துறையினர் யூரியாவைப் பயன்படுத்துவதால், விவசாயிகளுக்குத் தேவையான யூரியா கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்படுகிறது.

இதைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் மட்டுமே பயன்படுத்தும் வகையில், ஒரே வண்ணத்திலான யூரியா, விவசாயிகளின் பயன்பாட்டுக்கு வழங்கப்படும். கர்நாடகத்தில் தகவல், உயிரித் தொழில்நுட்பத்துக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை பிளாஸ்டிக் தொழில்நுட்பத்துக்கும் வழங்க வேண்டும்.

கர்நாடகத்தில் பிளாஸ்டிக் தொழில்நுட்ப மையம் அமைப்பதற்கான நிலத்தை மாநில அரசு வழங்க வேண்டும். உரத்துக்கு ரூ.18,000 கோடி

மானியம் வழங்கப்படுகிறது. முதல்முறையாக இயற்கை முறையில் தயாரிக்கப்படும் உரத்துக்கு டன்னுக்கு ரூ.1,500 மானியம் வழங்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

குப்பைகளிலிருந்து இயற்கையான உரங்களைத் தயாரிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கர்நாடகத்தின் மங்களூரில் ஏற்கெனவே உரம் உற்பத்தித் தொழில்சாலை உள்ளது. மாநில அரசு நிலம் வழங்கினால், வட கர்நாடகத்திலும் மேலும் ஒரு உரத் தொழிற்சாலை தொடங்கப்படும் என்றார் அவர்.

## அதிக லாபம் தரும் சுங்குனியானா சவுக்கு



அரக்கோணம்: இன்றைய காலகட்டத்தில் விவசாயிகள் அதிகம் சிரமப்படாமலும், அதேசமயம் கூடுதல் லாபம் ஈட்டித் தரும் பயிர்களையே சாகுபடி செய்ய விரும்புகின்றனர். காரணம், இன்று கிராமப்புறங்களில் விவசாயப் பணிக்கு ஆள்கள் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் அவர்கள் நகர்ப்புறங்களுக்கு இணையாகக் கூலி கேட்பதால் கட்டுப்படி ஆகாத நிலையில் வேலையாள்களை அழைப்பதில்லை. அதேசமயம்... என்ன தான் இயந்திரங்களைக் கொண்டு சாகுபடி செய்யலாம் என்றாலும்

அந்த இயந்திரங்களில் ஏற்படும் பழுதுகளை பார்க்கவோ, அதை பராமரிக்கவோ விவசாயிகளால் முடியவில்லை. மேலும் அவற்றின் விலையும்அதிகம்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு சிரமம் இல்லாத, சாகுபடி செலவு குறைந்த பயிரான இருப்பது சவுக்கு. மேலும் இவற்றை வியாபாரிகளும் நிலத்துக்கே வந்து வாங்கிச் செல்வதால் பெரும்பாலான விவசாயிகள் தற்போது சவுக்கு சாகுபடி செய்யவே விரும்புகின்றனர்.

அந்த வகையில் விவசாயத்துக்கு ஏற்றது சுங்குனியானா சவுக்கு ரகம். இம்மரம் சாதாரண சவுக்கு மரங்களை விட வேகமாக வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. இது 15 முதல் 25 மீட்டர் உயரம் வரையிலும், குறுக்கு விட்டம் 30 முதல் 50 செ.மீ. வரையிலும் வளரக்கூடியது. இம்மரங்கள் கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,000 மீட்டர் உயரமும், 700-1,500 மி.மீ. மழையளவு வரையான பல்வேறு தட்பவெட்ப நிலைகளைத் தாங்கி வளரக்கூடியது. மணற் பாங்கான நிலங்களிலிருந்து களிமண் வரையிலான எல்லா வகை மண்ணின் வளத்துக்கு ஈடுகொடுத்து நன்கு வளரும். அமிலத்தன்மை உள்ள களிமண்ணிலும், காரத்தன்மை மிக்க சுண்ணாம்புச்சத்துள்ள மண்ணிலும் வளரும்.

நாற்றங்கால் அமைத்தல்: மணல், செம்மண் 9:1 என்ற விகிதத்தில் கலந்து சுமார் 30 செ.மீ. உயரத்துக்கு தாய்பாத்தி அமைக்கவேண்டும். அதிக அளவு மணல், விதைகள் அழுகுவதையும், பூஞ்சாண் பாதிப்பையும் தடுக்க உதவும். விதைகளை சம அளவு மணலுடன் நன்கு கலந்து விதைப்பதால் அவற்றைச் சீராக பரவலாக விதைக்கலாம். இந்த விதைகள் காற்றில் அடித்து செல்லாப்படாமலிருக்க சிறிதளவு மணலை விதைகளை மூடும் அளவுக்குத் தூவுதல் வேண்டும். வைக்கோல், தழைகளைக் கொண்டு தாய்ப்பாத்தியை மூடி, பூவாளியால் தினம் இருமுறை நீர் தெளித்து வரவேண்டும். சவுக்கு மர விதைகள் 10 தினங்களில் முளைத்து விடும். ஒரு கிலோ விதையிலிருந்து சுமார் ஒரு லட்சம் நாற்றுகள் கிடைக்கலாம். 50 சதவீதம் முளைத்த நாற்றுகள் சுமார் 3-5 செ.மீ. உயரம் அடைந்தவுடன் உரமண் கலவை நிரப்பப்பட்ட 10ஷ்20 செ.மீ. அளவுள்ள பைகளுக்கு மாற்ற வேண்டும். அந்தப் பைகளில் பிராங்கியா பாக்டீரியா சேர்ப்பது வீரிய வளர்ச்சிக்கு உதவும். பைகளுக்கு மாற்றப்பட்ட நாற்றுகள் சுமார் 3

மாதங்களில் 25 முதல் 30 செ.மீ. உயரம் வளர்ந்து நடவுக்குத் தயாராகிறது. கலப்பின ஆண் மலட்டுத் தன்மை கொண்ட மரங்களிலிருந்து இளம் துளிர்ப்பு துணுக்குகள் வேர் ஊக்கி நொதிகளினை தடவி துளிர்க்க செய்து நாற்றுகளை உற்பத்தி செய்யலாம்.

நடவு: சாதாரண சவுக்கு போன்று 1மீ. ஷ 1மீ. அல்லது 2மீ. ஷ 2மீ. இடைவெளியில் தேவைப்படும் கழிகளின் பருமனுக்கு ஏற்ப நாற்றுகளை உழவு செய்த நிலத்தில் 0.30ஷ0.30ஷ0.30மீ. அளவுள்ள குழிகளில் நடவேண்டும். தொழுஉரம், மண்புழு உரம் இடுவது வளர்ச்சியை மேலும் கூட்ட உதவும். நடவு செய்யப்பட்ட, முதல் 2-3 ஆண்டுகளில் ஆண்டுக்கு சராசரியாக சுமார் 3 மீட்டர் உயரம் வரை வளரும். தாய்லாந்து நாட்டு கலப்பின வகையான இவ்வகை சவுக்கு சுமார் ஐந்து ஆண்டுகளில் 20 மீட்டர் உயரமும், 25 செ.மீ. குறுக்கு விட்டமும் கொண்ட மரமாகிறது. நடவு செய்யப்பட்ட முதல் ஆண்டு மட்டும் கிளை எடுப்பது அவசியமாகிறது. அதன் பின் மரத்திலிருந்து விழும் சிறு கிளை துண்டுகள் போர்வை போல அமைந்து களைகளின் வளர்ச்சியை முழுக்க கட்டுப்படுத்துகிறது.

வறட்சிக் காலங்களில் நீர் பாய்ச்சுவது செடிகளின் இழப்பை முழுக்க தவிர்க்கபயன்படும்.

மகசூல்: இம்மரத்தை 3 முதல் 5 ஆண்டுகளில் தேவைக்கேற்ப வெட்டலாம். கழிகள், விறகுக்கு 3 ஆண்டுகளிலும் சிறு நாற்காலிகள், மரத் தளவாடப் பொருள்கள், சிறு கருவிகள், நீண்ட கழிகளுக்குத் தேவையான மரத்துக்கு 5 ஆண்டுகளிலும் வெட்ட வேண்டும். நான்கு ஆண்டுகளில் ஒரு ஏக்கரில் 40 டன்கள் வரை கிடைக்க வாய்ப்புள்ளது. கழிகளாக விற்றால் ஒரு மரத்துக்கு ரூ.25 வரை கிடைக்கிறது. இவ்வாறாக ஒரு ஏக்கருக்கு ரூ.25,000 வரை வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. சுங்குனியான கலப்பின சவுக்கில் மரம் வெட்டப்பட்டபின் வெட்டு முகப்பிலிருந்து மறு துளிர் வளரக்கூடிய குணமிருப்பதால் முதலீடு இல்லாமல் மீண்டும் அறுவடை செய்து வருவாய் ஈட்டலாம்.

பயன்கள்: வளர்ந்த மரத்திலிருந்து சிறுசிறு பர்னிச்சர்கள், விவசாய கருவிகள் செய்யலாம். மரம் வெடிக்கும் தன்மை கொண்டது. கட்டுமானப் பணிகளில் சாரம் அமைக்க தாங்கு கழிகளாகவும், சிறு வீடுகளின் கூரை

மற்றும் கம்பங்களுக்கும் பயன்படுகிறது. மரம் கனமீட்டருக்கு சுமார் 900-1,000 கிலோ வரை எடையுள்ளதால், சிறந்த விறகாகவும், கரி தயாரிக்கவும் பயன்படுகிறது. இதன் கரி 34,500 ந்த்ந்ஞ் அளவு வெப்பம் தரவல்லதால், அனைத்து விறகு மர இனங்களை விட சிறந்ததாக கருதப்படுகிறது.

காகித உற்பத்தி தொழிற்சாலைகளில் மூலப்பொருளாக இதனைப் பயன்படுத்தலாம். இம்மரத்தை தோட்டங்களின் எல்லையில் காற்றுத் தடுப்பானாகவும் வளர்க்கலாம். இம்மரத்தின் வேர்களில் காணப்படும் பிராங்கியா (ஊழ்ஹய்ந்ண்ஹ) எனப்படும் பாக்டீரியா காற்றிலுள்ள நைட்ரஜனை நைட்ரேட் உப்புகளாக மாற்றி நிலத்தில் சேமிப்பதால் மண்வளம்மேம்படுகிறது.

இந்த சவுக்கு பயிரிடுவது குறித்து மேலும் விவரம் தேவைப்படுவோர் கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் உள்ள வனவியல் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய முதல்வரை 04254 222398 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம்.

## மல்பெரி சாகுபடியில் பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்கள்



ஈரோடு: மல்பெரி சாகுபடியில் பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை மேற்கொள்வது குறித்து ஈரோடு மாவட்ட மத்திய வேளாண் அறிவியல் நிலையத்தின் (மைராடா) உழவியல் தொழில்நுட்ப வல்லுநர் ச.சரவணகுமார் விளக்கம் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்தி:

பட்டுப்புழுத் தொழிலில் புழுக்களின் உணவுக்காக மல்பெரி செடி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மல்பெரி செடியின் வளர்ச்சி மற்றும் இலைகளின் தரத்தை குறைப்பதில் பூச்சிகள் பெரும் பங்கு வகிக்கின்றன. இதனால், பட்டுப்புழு தொழிலானது பெரும் சரிவைச் சந்திக்க நேரிடுகிறது. எனவே, மல்பெரி செடியை தாக்கும் பூச்சிகளைக் கண்டறிந்து அவற்றின் ஆரம்ப நிலையிலேயே கட்டுப்படுத்த வேண்டும்.

மல்பெரி செடியை தாக்கும் பூச்சிகளில் மிகவும் முக்கியமாக விளங்குபவை மாவுப்பூச்சி, இலை பிணைக்கும் புழு, இலைப் பேன், கரையான் போன்றவையாகும். மாவுப்பூச்சி: வெள்ளையாகப் பஞ்சு போல படர்ந்த முட்டைகளுடன்கூடிய இந்தப் பூச்சிகள், கூட்டமாக இலையின் நரம்புகள், இளம் கண்டுகளில் பரவி சேதாரத்தை ஏற்படுத்தும். இவை இளம் தண்டின் சாறினை உறிஞ்சுவதால் இலைகள் சிறுத்து மஞ்சள் நிறமாகி பின்னர் உதிர்ந்து விடுகின்றன. இந்தப் பூச்சிகள் மல்பெரி மட்டுமல்லாது பப்பாளி, மரவள்ளி, பார்த்தீனியம், துத்தி, செம்பருத்தி உள்ளிட்ட 80-க்கும் மேற்பட்ட பயிர்களைத் தாக்கவல்லது. இந்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த அசிரோபேகஸ் பப்பாயே எனும் ஒட்டுண்ணிகளை ஏக்கருக்கு 500 வீதம் பாதிக்கப்பட்ட வயல்களில் வெளியிட வேண்டும். மல்பெரி சாகுபடி செய்யும் பகுதிகளில் உள்ள களைகளை அவ்வப்போது அப்புறப்படுத்த வேண்டும்.

மேலும், தாக்குதல் அதிகரிக்கும் பட்சத்தில் புரபனோபாஸ் அல்லது புப்ரோபெசின் என்னும் பூச்சிக்கொல்லியை 1 லிட்டர் நீருக்கு 2 மில்லி வீதம் கலந்து தெளிக்க வேண்டும்.

இலை பிணைக்கும் புழு: மல்பெரி செடியின் இலைகளின் நுனிப் பகுதியில் இளம் புழுக்கள் இருந்து கொண்டு இலையின் திசுக்களை உண்ணும். வளர்ந்த புழுக்கள் வேகமாக இலைகளை உண்பதுடன் அதன் கழிவுகளை வெளியேற்றுவதால் அவை பட்டுப்புழு உண்பதற்கு

உதவாது. இதனால் இலைகள், செடிகளின் வளர்ச்சி குன்றி காணப்படும்.

இத்தகைய புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த மல்பெரி செடிகளை கவாத்து செய்த உடன் நீர் பாய்ச்சுவதன் மூலம் கூட்டுப்புழுக்களை கட்டுப்படுத்தலாம். மேலும், டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் என்னும் முட்டை ஒட்டுண்ணியை ஒரு ஹெக்டருக்கு 5 அட்டை வீதம் கட்ட வேண்டும்.

மேலும், தாக்குதல் தீவிரமடையும் பட்சத்தில் டைக்குளோர்வாஸ் என்னும் பூச்சிக் கொல்லி 1 மில்லியை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

இலைப்பேன்: இந்தப் பூச்சிகள், இலைகளின் அடிப்பரப்பில் இருந்து கொண்டு இலைகளைச் சுரண்டி அதன் சாற்றினை உறிஞ்சி விடுகின்றன. இந்தப் பூச்சிகள் தாக்கப்பட்ட இலைகளில் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் அவை பட்டுப்புழு உணவாக பயன்படுத்த முடியாது.

மேலும், தாக்குதல் தீவிரமடையும் பட்சத்தில் பாதிக்கப்பட்ட இலைகள் வாடியும், இலைகள் சிறுத்தும் வெளிறிய கோடுகளுடன் காணப்படும். இந்த வகை பூச்சிகளை கட்டுப்படுத்த கைத்தெளிப்பானில் தண்ணீரைக் கொண்டு தெளிப்பதன் மூலம் பேன்கள் நீருடன் கழுவிச் செல்லப்படுகின்றன. ஏக்கருக்கு 20 மஞ்சள் நிற ஒட்டுப்பொறிகளை வைப்பதன் மூலம் கவர்ந்து அழிக்கலாம். அல்லது ஒரு லிட்டர் நீருக்கு 3 மில்லி வீதம் வேப்பெண்ணையை கலந்து தெளிப்பதன் மூலமும் இலைப்பேனைகட்டுப்படுத்தலாம்.

கரையான்: பொதுவாக செம்மண், மணற்பாங்கானப் பகுதிகளில் நடவு செய்யப்பட்ட மல்பெரி செடிகளில் கரையான்களின் தாக்குதலானது அதிகமாக காணப்படும். இவை பெரும்பாலும் மல்பெரியின் வேர்ப்பகுதிகள், தண்டுகளில் சேதாரத்தை ஏற்படுத்துகின்றன. கரையானை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீருக்கு 5 மில்லி வேப்பெண்ணெய் வீதம் கலந்து மல்பெரி செடிகளின் வேர், தண்டுப் பகுதிகளில் தெளிக்க வேண்டும். குளோர்பைரிபாஸ் என்னும் பூச்சிக்கொல்லியினை ஒரு லிட்டர் நீருக்கு 4 மில்லி வீதம் கலந்து கரையான் புற்றுகள் இருக்கும் இடத்தில் ஊற்றுவதன் மூலமும் கரையானை கட்டுப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## ஒட்டன்சத்திரம் அருகே விவசாயிகள் கருத்துகேட்புக் கூட்டம்

ஒட்டன்சத்திரம் அருகே கள்ளிமந்தையத்தில் விவசாயிகள் கருத்துகேட்புக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு உழவர் உழைப்பாளர் கட்சியின் மாநிலத் தலைவர் கே.செல்லமுத்து தலைமை வகித்தார். அரவக்குறிச்சி தாலுகா விவசாயி சங்கத் தலைவர் நல்லசாமி, மூலனூர் விவசாயிகள் சங்கத் தலைவர் செல்லமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், கண்ணிவெளி விதை பயிர் செய்த விவசாயிகள், கண்ணிவெளி விதைக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

பின்னர் கே.செல்லமுத்து செய்தியாளர்களிடம் கூறியதாவது: திண்டுக்கல், ஈரோடு,திருப்பூர், கோவை, கரூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் மூலிகை பயிரான கண்ணிவெளி விதையை ஏராளமான விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். கடந்த ஆண்டு ஒரு கிலோ விதையை ரூ.700-க்கு வெளிநாட்டு நிறுவனங்களும், வியாபாரிகளும் கொள்முதல் செய்தனர். ஆனால் அதே ஆண்டில் 4 மாதங்கள் கழித்து ஒரு கிலோ ரூ.1200-க்கு கொள்முதல் செய்தனர். இதனால் ஏராளமான விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். இதனால் நிகழாண்டில் கண்ணிவெளி விதைக்கு உரிய விலை நிர்ணயம் செய்யும் வரை விவசாயிகள் விதையை விற்பனை செய்வது இல்லை என முடிவு எடுத்துள்ளார்கள் என்றார் அவர்.

## அவிநாசியில் ரூ.1.65 கோடிக்கு பருத்தி ஏலம்

அவிநாசியில் புதன்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ. ஒரு கோடியே 65 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த

வாரம் நடைபெற்ற ஏலத்தில், பருத்தி வரத்து அதிகரித்து 7,500 மூட்டைகள் வந்திருந்தன.

இதில், ஆர்.சி. எச் ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 4,600 முதல் ரூ. 5,100 வரையிலும், டி.சி. எச் ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5,500 முதல் ரூ. 6,200 வரையிலும், மட்டரகப் பருத்தி ரூ. 1,600 முதல் ரூ. 2,100 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 1 கோடியே 65 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது. வரத்து அதிகரித்தபோதிலும், விலையில் பெரிய மாற்றம் ஏற்படவில்லை.

ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 750 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 24 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## ரூ. 57 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 57 லட்சத்துக்குக் கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள் 2,342 மூட்டைகளில் 1,13,000 கிலோ கொப்பரையைக் கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 52-க்கும், அதிகபட்சமாக ரூ. 54.80-க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 30.15-க்கும், அதிகபட்சமாக ரூ. 51.25-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 57 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் நடைபெற்றதாக சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

**எளிய முறையில் மாட்டுத் தீவனப் பயிர் வளர்க்கும் ஓமலூர் வேளாண் பட்டதாரி**

எளிமையான முறையில் கறவை மாடுகளுக்கு தீவனப் பயிர் வளர்த்து ஓமலூரைச் சேர்ந்த வேளாண் பட்டதாரி வெற்றி கண்டுள்ளார்.

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகேயுள்ள இந்திரா நகர் பகுதியைச் சேர்ந்தவர் சுப்பிரமணி மகன் தினகரன் (30). வேளாண் பட்டதாரியான இவர், அந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் உற்பத்தி குறித்த ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

கிராமப் பகுதிகளில் மாடுகள் வளர்ப்பதை போலவே, நகர் பகுதிகளிலும் கறவை மாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கிராமப் பகுதிகளில் மேய்ச்சல் நிலங்கள் அதிகமாக இருப்பதால், கிராமவாசிகள் தீவனத்துக்கு சிரமமில்லை. இருப்பினும், மழை இல்லாத காலங்களில் மாடுகளுக்கு தீவனத்தை விலைக்கு வாங்கியே கொடுக்கும் நிலை ஏற்படுகிறது. இதுபோன்ற நிலையைச் சமாளிக்கும் வகையில், வேளாண் பட்டதாரி தினகரன் தீவனப் பயிர் வளர்க்கும் எளிமையான முறையைக் கண்டுபிடித்துள்ளார். இதற்கு வீட்டில் ஏழு அடுக்குகள் கொண்ட ரேக் ஒன்றும், பிளாஸ்டிக் பிளேட்களும் தேவை. இந்த பிளேட்டில் நாம் மாட்டுக்கு கொடுக்க விரும்பும் பயிரை தீவனமாக வளர்க்க முடியும். இவர் இதன் மூலம் மக்காச்சோளப் பயிரை வளர்த்துள்ளார்.

இதுகுறித்து தினகரன் கூறியது: சுமார் ஒரு கிலோ மக்காச்சோள விதையை நன்றாக தண்ணீரில் ஊறவைக்க வேண்டும். பின்னர் அதை எடுத்து ஐந்தாகப் பிரித்து, ஐந்து பிளாஸ்டிக் பிளேட்களில் பரப்பி அதன்மீது ஈரமான துணியைப் போட வேண்டும். இந்த விதைகள் முளைக்க ஆரம்பித்து நன்றாக வளரும். அதன் வளர்ச்சி அடுத்தடுத்து வரும்போது, வேறு ரேக்குக்கு அந்த பிளேட்களை மாற்ற வேண்டும். இவ்வாறு செய்யும்போது, ஏழாவது நாளில் இந்த பயிர் மாடுகள் உண்ணும் அளவுக்கு சுமார் ஓர் அடி உயரத்துக்கும் மேலாக வளர்ந்து விடும். ஏழாவது அல்லது பத்தாவது நாள் வரைகூட வளர்த்து அந்த பயிரை அப்படியே முழுமையாக மாடுகளுக்கு தீவனமாகக்

கொடுக்கலாம். அந்த அளவுக்கு நல்ல முறையில் பசுமையாகவும், அதன் தன்மை மாறாமலும் வளர்ந்து விடும்.

இதற்கு மண், உரம் எதுவும் தேவையில்லை. மேலும், இட வசதியும் அதிகமாக தேவையில்லை. குறைந்த அளவிலான இடத்திலேயே அதிக அளவிலான தீவனப் பயிர்களை வளர்க்க முடியும். இந்த முறையில் வளரும் விதையானது, வளர்ந்து பயிரானதும் அப்படியே வேருடன் மாடுகளுக்கு உணவாகக் கொடுக்கலாம். இதனால், மாடுகளுக்குத் தேவையான அனைத்து வகையான சத்துகளும் முழுமையாகக் கிடைப்பதால், மாடுகள் வழக்கத்தை விட அதிகமான பால் தரும். மேலும், இதேபோன்று ராகி, கம்பு, கொள்ளு, அவரை போன்ற பயிர்களையும் மாடுகளுக்குத் தீவனமாக வளர்த்துக் கொடுக்கலாம். இது எளிமையான தீவன வளர்ப்பு முறையாகும் என்றார். வேளாண் துறை அதிகாரிகள் வாய்ப்பு கொடுத்தால், இதுபோன்ற ஆலோசனைகள் மற்றும் பயிற்சியை விவசாயிகளுக்கு இலவசமாக செய்யவும், வேளாண்மை ஆலோசனைகள் வழங்கவும் தயாராக இருப்பதாக தினகரன் தெரிவித்தார்.

## விராலிமலையில் உழவர் மன்றம் தொடக்கம்

வடுகப்பட்டியில் விராலிமலை உழவர் மன்றத் தொடக்க விழா புதன்கிழமை நடைபெற்றது.

விராலிமலை அருகேயுள்ள வடுகப்பட்டி ஊராட்சி சேவை மன்றத்தில் நடைபெற்ற விழாவில் பங்கேற்ற நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் எஸ். சோமசுந்தரம் மன்றத்தை தொடங்கி வைத்துப் பேசினார்.

உழவர் மன்ற சிறப்பு குறித்து வேளாண் பொறியியல் செயற்பொறியாளர் எம். ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர் கே. ஆர். மாசிலாமணி, வேளான் உதவி இயக்குநர் பெ. எட்வர்ட்சிங் ஆகியோர் பேசினர். உழவர் மன்றம், வங்கியின் பங்கு குறித்த விவசாயிகளின் சந்தேகங்களுக்கு இந்தியன் வங்கி மேலாளர் ஏ. பி. தேவபிரசாத் கிருபாகரன் பதிலளித்தார். நிகழ்ச்சியில் தோட்டக்கலைத் துறை துணை அலுவலர் எம். ஜோசி, மன்றத் தலைவர் க. ராஜா,ரத்தினம், க. அன்பழகன் உள்ளிட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## நீடாமங்கலத்திலிருந்து திருநெல்வேலிக்கு 945 டன் நெல் மூட்டைகள் அனுப்பிவைப்பு

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ரயில் நிலையத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்துக்கு அரவைக்காக 945 டன் நெல் மூட்டைகள் புதன்கிழமை அனுப்பிவைக்கப்பட்டன.

சம்பா, தாளடி நெல் அறுவடைப் பணிகள் தொடங்கி, டெல்டா மாவட்டங்களில் அரசு நேரடி நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு கொள்முதல் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் வெளி மாவட்டங்களுக்கு அரவைக்காக அனுப்பும் புதன்கிழமை நடைபெற்றது.

நுகர்பொருள் வாணிபக்கழக மன்னார்குடி தரக்கட்டுப்பாட்டு மேலாளர் துரைராஜ் பூஜைகளை நடத்திவைத்து பணிகளை தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில், நுகர்பொருள் வாணிபக்கழக துணை மேலாளர் காத்தையன், ரயில்நிலைய கண்காணிப்பாளர் அன்பழகன், உதவி தர ஆய்வாளர் நாடிமுத்து, ஏஐடியுசி ஒன்றியச் செயலர் யு. சந்துரு மற்றும் லாரி உரிமையாளர்கள், சுமைத்தூக்கும் தொழிலாளர்கள் 70 பேர் கலந்துகொண்டனர்.

சன்னரக நெல் பல்வேறு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து 75 லாரிகளில் கொண்டுவரப்பட்டு, நீடாமங்கலம் ரயில் நிலையத்தில் சரக்கு ரயிலின் 21 பெட்டிகளில் ஏற்றப்பட்டு 945 டன் நெல் மூட்டைகள் திருநெல்வேலி மாவட்டத்துக்கு அரவைக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### எள் விதை பரிசோதனை செய்ய அழைப்பு

காஞ்சிபுரம்:விவசாயிகள், எள் முளைப்பு திறன் அறிந்து விதைத்தால், கூடுதல் மகசூல் பெறலாம் என, விதை பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் ஹேமேந்திரகுமார் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

காஞ்சிபுரம் மாவட்டத்தில், நடப்பு ஆண்டு, எள் உற்பத்தி செய்யும் விவசாயிகள், தங்களிடம் உள்ள எள் விதையை, திறன் அறிந்து பயிரிட்டால், கூடுதல் மகசூல் பெறலாம். அதற்காக எள் விதை வைத்திருக்கும் விவசாயிகள், 30 கிராம் எள்ளை, 30 ரூபாய் கட்டணம் செலுத்தி பரிசோதனை செய்து கொள்ளலாம். நேரிலோ, தபாலிலோ விதையை அனுப்பி, பரிசோதனை செய்து கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### கும்பகோண கொழுந்து வெற்றிலை

மகாமகம் நடக்கும் கும்பகோணம் கொழுந்து வெற்றிலைக்கும் பெயர் பெற்றது. கும்பகோணத்தை சுற்றியுள்ள அய்யம்பேட்டை, ராஜகிரி, பண்டாரவாடை, திருவையாறு, ஆவூர், சுவாமிமலை ஆகிய ஊர்களில் பயிராகும் வெற்றிலையும் கும்பகோணம் வெற்றிலை என்றே அழைக்கப்படுகிறது.வெற்றிலை நட்டு வைத்த நாள் முதல் கடைசி வரை வெறும் இலை மட்டுமே வரும். பூ, காய், பழம், விதை எனஎதுவுமே வராது. 'வெறும் இலை' என அழைக்கப்பட்டு அதுவே பின்னாளில்

வெற்றிலை ஆனது. கரும்பச்சையாக இருப்பது ஆண் வெற்றிலை. இளம்பச்சையாக இருப்பது பெண் வெற்றிலை. வெற்றிலையில் 84.4 சதவீதம் நீர்ச்சத்து உள்ளது.

## 'கெயில்' பிரச்னையில் அரசின் செயல்பாடு: தமிழக விவசாயிகள் சங்கம் ஆதரிக்க முடிவு

ஈரோடு: 'கெயில்' பிரச்னையில், தமிழக அரசின் செயல்பாடுகளுக்கு விவசாயிகள் சங்கம் ஆதரவு தர முடிவு செய்துள்ளது.

ஈரோடு மாவட்ட தமிழக விவசாயிகள் சங்க நிர்வாகக்குழு கூட்டம், மாவட்ட தலைவர் பெரியசாமி தலைமையில் ஈரோட்டில் நடந்தது. ஈரோடு மாவட்டம் உட்பட, ஏழு மாவட்ட விவசாயிகளை பாதிக்கும் கெயில் நிறுவன குழாய் பதிக்கும் திட்டத்துக்கு சட்ட ரீதியாக தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. அத்திட்டத்தை செயல்படுத்த விடாமல் தடுத்தது. உச்சநீதிமன்றம் மீண்டும் அதே வழித்தடத்தில் குழாய்களை பதிக்கலாம் என தீர்ப்பு வழங்கி உள்ளது. இது, விவசாயிகளை பாதிக்கும் வகையிலானது. இத்திட்டத்தை தடுக்கும் வகையில், தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு, தமிழக விவசாயிகள் சங்கம் ஆதரவு அளிப்பது. உழவர்களின் தலைவர் என கருதப்படும் நாராயணசாமி நாயுடு பெயரை கூறி, சிலர் விவசாயிகள் கூட்டு இயக்கம் என்ற பெயரில், அவரது படத்தையும், ஏர் உழவன் சின்னத்தையும் பயன்படுத்தி, வசூல் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அவ்வாறு பயன்படுத்தக்கூடாது. வரும், 6ம் தேதி காலை, 10 மணிக்கு, கோவை வையம்பாளையத்தில் உள்ள அவரது நினைவிடத்தில், உழவர் பூஜையும், விவசாயிகள் மாநாடும் நடத்துவது என, கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## காளான் வளர்ப்பு பயிற்சி: பிப்.,6ல் ஈரோட்டில் துவக்கம்

கோபிசெட்டிபாளையம்: காளான் வளர்ப்பு குறித்த, இரண்டு நாள் பயிற்சி ஈரோட்டில் பிப்.,6ம் தேதி துவங்குகிறது. காளான் வளர்ப்பு மற்றும் காளானில் மதிப்பு கூட்டுதல் குறித்த இரு நாள் பயிற்சி பிப்., 6 முதல் 7 ம்தேதி வரை ஈரோட்டில் நடக்கிறது. மாவட்ட தொழில் மையம் பின்புறம் உள்ள ஈரோடு மாவட்ட சிறு தொழில்கள் சங்கத்தில் இப்பயிற்சி நடக்கிறது. காளான் வளர்ப்பு மற்றும் காளானில் மதிப்பு கூட்டுதல் பயிற்சியும் நடக்கிறது. பயிற்சியில் சான்றிதழ், செயல்முறை விளக்கம், கையேடு, மதிய உணவு வழங்கப்படும், என ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன் தெரிவித்தார்.

## மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் மக்கள், மாணவர்கள் பார்வைக்கு அனுமதி

தூத்துக்குடி: தூத்துக்குடியில் உள்ள மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்ட தினத்தில், மக்கள், மாணவர்கள் பார்வைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

மத்திய அரசின் வேளாண் ஆய்வு மற்றும் கல்வித்துறை மற்றும் இந்திய வேளாண் ஆய்வுக்கழகத்தின் கீழ் மத்திய மீன் வள ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் கிழக்கு,மேற்கு கடற்கரை பகுதியில் மூன்று மண்டல நிலையங்களும், ஏழு ஆராய்ச்சி நிலையங்களும், ஒரு விசாய அறிவியல் நிலையமும் செயல்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மையம் 1947 பிப்., 3 ம் தேதி துவக்கப்பட்டது. முதலில் மீன் வள கணக்கெடுக்கும் நிலையமாக இருந்தது. தற்போது மீன் வள ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு வருகிறது. மீன் வள ஆய்வில் பல ஆராய்ச்சி கட்டுரைகள் வழங்கிதேசிய அளவிலும், உலக அளவிலும் அங்கீகாரம் பெற்றுள்ளது.

மீன் வள ஆராய்ச்சி மையம் நிறுவிய தினத்தை முன்னிட்டு பொது மக்கள் பார்வைக்கு நேற்று அனுமதிக்கப்பட்டது.

தகவல்கள்:சிப்பிகளை உருவாக்குதல்,பண்ணைகளில் வளர்த்தல்,கடல் முத்துக்கள் உருவாக்குதல்,கடல் சங்கு, கடல் அட்டைகள் வகைகளை குஞ்சு பொரிக்க வைத்தல், ஆழ்கடல் ஆராய்ச்சி,நுண்பாசி, நுண்ணுயிர்களை வளர்த்தல், உயிர் மீன் அருங்காட்சியகம்,மீன் வள சுற்றுச்சூழல், ஆகியவை குறித்து மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. வீடியோ படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் மாநகராட்சி கமிஷனர் பூங்கொடி அருமைக்கண், மீன் வள இணை இயக்குனர் அமலசேவியர், உதவி இயக்குனர்கள் ஐசக் ஜெயக்குமார், சிவக்குமார் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை மத்திய கடல் மீன் வள ஆராய்ச்சி மைய முதன்மை விஞ்ஞானி பி.பி.மனோஜ்குமார் மற்றும் அதிகாரிகள் செய்திருந்தனர்.

## மலை மீது மலர் வளர்த்தால் 50 சதவீத மானியம்

கோத்தகிரி: 'பசுமைக்குடில் அமைக்க, 50 சதவீதம் மானியம் வழங்கி வருவதால், மலர் உற்பத்தி செய்யும் பரப்பளவு அதிகரித்து வருகிறது' என, தெரிவிக்கப்பட்டது.

கோத்தகிரியில் காளான் வளர்ப்பு மற்றும் கொய்மலர் சாகுபடியை பார்வையிட்ட கலெக்டர் சங்கர், நிருபர்களிடம் கூறியதாவது: நீலகிரியில், ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்க திட்டத்தில், நடப்பாண்டு, 491.08 லட்சம் ரூபாய் நிதி பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், காய்கறி, வாசனை பயிர்கள், பயிர் வினியோகம், கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் பழம் மற்றும் காய்கறி சாகுபடி செய்தல், தோட்டக்கலை பயிர்கள் இயந்திரமாக்குதல் பயிற்சி வழங்குதல் மற்றும் அறுவடைக்கு பின் நேர்த்தி செய்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கோத்தகிரியில் நடப்பாண்டு, வங்கி கடன் உதவியுடன் கூடிய பின்னேற்பு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ், காளான் உற்பத்தி, கம்போஸ்ட் உரம் தயாரிக்க, 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 40 சதவீத மானியமாக, 16 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டு, இரண்டு நபர்களுக்கு, 32 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கட்டுப்படுத்தப்பட்ட சூழலில், மலர் உற்பத்தி செய்வதற்காக, 4,000 ச.மீ., பரப்பளவில் பசுமைக்குடில் அமைக்க, 16.88 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று, மாவட்டத்தில், 69 ஆயிரத்து, 750 ச.மீ., பரப்பளவில், 326 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த, 5 ஆண்டுகளில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தில், பசுமைக்குடில் அமைக்க, 50 சதவீதம் மானியம் வழங்கியதன் மூலம், மலர் உற்பத்தி பரப்பளவு, ஒன்பது எக்டராக உயர்ந்துள்ளது.

நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ், 100 சதவீத மானியத்தில், 2,078 எக்டர் பரப்பளவுக்கு பாசன கருவிகள் வழங்கியதன் வாயிலாக, 900 எக்டர் பரப்பளவில் காய்கறி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எச்.ஏ.டி.பி., திட்டத்தில், 50 சதவீத மானியத்தில் உயர் விளைச்சல் காய்கறி விதைகள் வழங்கப்பட்டதால், 25 சதவீதம் காய்கறி உற்பத்தி திறன் அதிகரித்துள்ளது.

மேலும், 81 பவர் டில்லர், 25 மினி டிரேக்டர் மற்றும் இதர வேளாண் உபகரணங்கள் வழங்கப்பட்டதால், 2,078 எக்டர் பரப்பளவில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கி, வேலையாட்கள் பிரச்னைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள பூங்காக்களில், கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டதால், சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

தொட்டபெட்டா அரசு தேயிலை பூங்கா, கூடலுார் வண்ணத்துப்பூச்சி பூங்கா ஆகியவை சுற்றுலா பயணிகளுக்காக புதிதாக திறக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, கலெக்டர் சங்கர் தெரிவித்தார்.

## "கண்வலிக்கிழங்கு விதைகளை விற்க மாட்டோம்' விவசாயிகள் முடிவு

கள்ளிமந்தயம்:"சென்ற ஆண்டுக்கு இழப்பீடும், இந்த ஆண்டு விலை நிர்ணயம் செய்யும் வரையும் கண்வலிக்கிழங்கு விதைகளை விற்கமாட்டோம்' என, கள்ளிமந்தயத்தில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் விவசாயிகள் முடிவெடுத்துள்ளனர்.

கள்ளிமந்தயத்தில் கண்வலிக்கிழக்கு விவசாயிகள் பங்கேற்ற கலந்துரையாடல் கூட்டம் , உழவர் <உழைப்பாளர் கட்சி தலைவர் செல்லமுத்து தலைமையில் நடந்தது. அரவக்குறிச்சி விவசாயி நல்லுச்சாமி முன்னிலை வகித்தார். மூலனூர் செல்லமுத்து வரவேற்றார்.

உழவர் உழைப்பாளர் கட்சி தலைவர் பேசியதாவது: பல்வேறு மாவட்டங்களில் கண்வலிக் கிழங்கு என்கிற மூலிகை பயிரிடப்படுகிறது. திண்டுக்கல், ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் அரவக்குறிச்சி, மூலனூர், தொப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் ஒன்றியங்களில் மிக அதிகமாக பயிரிடப்படுகிறது.

சென்ற ஆண்டு இந்த விதையை கிலோ ரூ.700க்கு வியாபாரிகள் வாங்கி கம்பெனிக்கு கொடுத்தனர். அதே ஆண்டில், 4 மாதங்களில் ரூ.1200 வரை விலை உயர்ந்தது. ரூ.700க்கு விற்ற விவசாயிகள் இழப்பிற்கு ஆளானார்கள். இந்த ஆண்டும் அதைப் போல ஏற்படாமல் இருக்க விதைகளை யாரும் விற்பதில்லை என்ற கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும். கம்பெனிக்காரர்கள் மற்றும் வியாபாரிகள் அணுகினால், சென்ற ஆண்டுக்கு இழப்பீடும், இந்த ஆண்டிற்கு விலை நிர்ணயமும் கேட்க வேண்டும் என்று ஒருமனதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. அதுவரை விதைகளை விற்பதில்லை என விவசாயிகள் முடிவு எடுத்துள்ளனர், என்றார்.

**தேங்காயில் மதிப்புக்கூட்டுதல் எப்படி தென்னை வளர்ச்சி வாரிய அதிகாரி யோசனை**

திண்டுக்கல்:திண்டுக்கல் அருகே செம்பட்டி ஆர்.வி.எஸ்., தோட்டக்கலை கல்லூரியில், தென்னை வளர்ச்சி வாரியம் சார்பில் கருத்தரங்கு நடந்தது. இதில் தென்னை வளர்ச்சி வாரியத்தலைவர் ஜோஸ் பேசியதாவது: இந்தியா உலகளவில் தென்னை சாகுபடியில் 3வது இடத்திலும், தேங்காய் விளைச்சலில் 2வது இடத்திலும், காய்ப்பு திறனில் முதலிடத்திலும் உள்ளது.

தென்னை சார் பொருட்களை மதிப்புக்கூட்டுதல் செய்து ஏற்றுமதி செய்வதில் 22 வது இடத்திலும், சாதாரணமாக ஏற்றுமதி செய்வதில் 25 வது இடத்திலும் உள்ளது. இந்தியா, இலங்கை, மலேசியா, தாய்லாந்து மற்றும் சீனாவில் தான் தேங்காய் பயன்பாடு அதிகம்.

இந்தியாவில் 14 லட்சம் எக்டேரில் தினமும் 70 கோடி காய்கள் உற்பத்தியாகின்றன. அமெரிக்கா போன்ற நாடுகளில் தேங்காய் இறக்குமதி செய்வது அதிகம். அமெரிக்காவில் தேங்காயை மதிப்புக்கூட்டுதல் செய்து 65 வகையிலான பொருட்களை உற்பத்தி செய்து விற்கின்றனர்.

தேங்காய் பால், அதை பதப்படுத்தி சர்க்கரை, தேங்காய் எண்ணெய், வாசனை திரவியம், சோப்பு, தேங்காய் பாலில் பல வகையான ஜூஸ் வகை, பதப்படுத்திய இளநீர், ரெடிமேட் தேங்காய் பூ, தேங்காய் மட்டையில் கற்கள், தேங்காய் நார்கள் மூலம் கயிறு, தேங்காய் சிரட்டை கொண்டு டீ கப் என பல்வேறு வகையில் மதிப்புக்கூட்டுதல் செய்து ஏற்றுமதி செய்யலாம்.

இதன் மூலம் தினமும் ரூ.ஆயிரம் சம்பாதிக்கலாம். தென்னை உற்பத்திக்கு 20 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. இதனால் வெறும் தேங்காய், இளநீர் என்று இருந்துவிடாமல், அதை எப்படி வேறு வகையில் மதிப்புக்கூட்டலாம் என, விவசாயிகள் சிந்திக்க வேண்டும், என்றார்.

கருத்தரங்கில் வேளாண் பல்கலை துணை வேந்தர் ராமசாமி, வேளாண்துறை இயக்குநர் ராஜேந்திரன் கல்லூரி தலைவர் குப்புசாமி, டாக்டர் குமார், தென்னை வளர்ச்சி வாரிய அதிகாரி ராஜிவ் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## மஞ்சள் ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி

வத்தலக்குண்டு:வத்தலக்குண்டு பைபாஸ் ரோட்டில் மஞ்சள் ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் துவங்கி உள்ளன.

வத்தலக்குண்டில் பைபாஸ் அமைக்க வேண்டும் பல்வேறு தரப்பினரும் கடந்த பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகின்றனர். சுற்றுலா பயணிகள், லாரி உரிமையாளர்கள், நீண்ட தூரம் செல்லும் பஸ்கள் வத்தலக்குண்டு நகருக்குள் ஏற்படும் போக்குரவத்து நெரிசலால் சலித்துப் போய், "பைபாஸ்' ரோடு கண்டிப்பாக வேண்டும் என்ற கோரிக்கை வலுத்தது.

இதற்கிடையே திண்டுக்கல்-குமுளி ரோடு அகலப்படுத்தும் பணி கடந்த தி.மு.க., ஆட்சிக்காலத்தில் துவங்கப்பட்டது.

ஆமை வேகத்தில் ஏற்கனவே இருந்த ரோடுகள் மட்டும் அகலப்படுத்தப்பட்டது. வத்தலக்குண்டு, தேவதானப்பட்டி, பெரியகுளம், தேனி, வீரபாண்டி, சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம் ஆகிய நகரங்களில் பைபாஸ் பணிகள் முடியாமல் இருந்தது.கடந்த மாதம் தேவதானப்பட்டி, வத்தலக்குண்டில் பைபாஸ் அமைக்கும் பணி ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் துவங்கி உள்ளது. முதற்கட்டமாக திண்டுக்கல்-பெரியகுளம் ரோட்டை இணைக்கும் வகையில் ரோடு அமைக்கப்பட்டு தார் பூசப்பட்டது. தற்போது மஞ்சள் ஆற்றின் மீது பாலம் கட்டுவதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடந்து வருகிறது.

தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையத்தினர் கூறுகையில்,"" 2 மாதங்களில் பைபாஸ் ரோட்டில் உள்ள பால பணிகள் அனைத்தும் முடிந்து போக்குவரத்திற்கு திறந்து விடப்படும்'' என்றனர்.

## மானிய விலையில் விவசாய கருவி வழங்கல்

ரிஷிவந்தியம்: பகண்டைகூட்ரோடு வேளாண் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் விசை உழுவை கருவி வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

ரிஷிவந்தியம் அடுத்த பகண்டைகூட்ரோடு வேளாண் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு

சர்க்கரை ஆலைத் தலைவர் கதிர் தண்டபாணி தலைமை தாங்கினார். அருணகிரி முன்னிலை வகித்தார். உதவி வேளாண் அலுவலர் தாமோதரன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் 10 விவசாயிகளுக்கு, மானிய விலையில் விசை உழுவை இயந்திரம் வழங்கப்பட்டது. இதில் ஒன்றிய துணை செயலாளர் அன்பரசு, வேளாண் அலுவலர்கள் ஆனந்தன், சிவசங்கரன், செந்தில், ராமச்சந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டனர். சேகர் நன்றி கூறினார்.

## வேளாண் வளர்ச்சி திட்டம் குறித்த ஆய்வு

கரூர்: கரூர் கலெக்டர் அலுவலகத்தில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் குறித்த, சிறப்பாய்வு கூட்டம் நடந்தது. இதில், கலெக்டர் ராஜேஷ் தலைமை வகித்து பேசியதாவது: விவசாயிகளுக்கு தேவையான வேளாண் உபகரணங்கள், பயன்படுத்தும் முறை போன்றவற்றை வேளாண் பொறியியல் துறை பயிற்சியுடன் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதுபோல் தோட்டக்கலைத்துறை விவசாய நில பகுதியில் தண்ணீர் தேவையறிந்து, மிக குறைந்த அளவு நீரில் சொட்டுநீர் பாசன முறையில் அதிக மகசூல் பெறும் பயிர் வகைகளை பயிரிட அறிவுறுத்துவதுடன் மானியத்திட்டங்களை எடுத்துக்கூறி செயல்பட வேண்டும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலை விஞ்ஞானிகள் விவசாய நிலப்பகுதிகளின் மண்ணின் தன்மையை எடுத்துரைத்து, அதற்கேற்ற பயிர்வகைகளை பயிரிட ஆலோசனை வழங்க வேண்டும். விணைத்தொழில் அமைத்திடும் வகையில்

விவசாயிகளுக்கு கால்நடை பராமரிப்புத்துறை, பட்டுவளர்ப்புத்துறை, மீன்வளத்துறை, வனத்துறை போன்றவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு விவசாயிகள் வேளாண் உற்பத்தியிலும், இணை தொழிலும் சாதனை படைக்க உறுதுணையாக இருக்க வேண்டும். இவ்வாறு தெரிவித்தார். கூட்டத்தில், டி.ஆர்.ஓ., அருணா, வேளாண்மை இணை இயக்குனர் அல்டாப், துணைஇயக்குனர்கள் மதனகோபால், சிவானந்தம், தோட்டக்கலைத்துறை இயக்குனர் முனியாண்டி உட்பட பலர் பங்கேற்றனர்.

**விளைநிலங்களில் நைட்ரஜன் சத்து...குறைவு: பயிர் வளர்ச்சி பாதிக்கும் நிலை**

தேனி:தேனி மாவட்ட மலைப்பகுதி விளை நிலங்களில் நைட்ரஜன் சத்து குறைவால் பயிர் வளர்ச்சி பாதிக்கப்படுவது மண் பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

மாவட்ட மண் வளபாதுகாப்பு துறை சார்பில் "தேசிய மண்வள அட்டை இயக்கம்' நடத்தப்பட்டு வருகிறது. இறவை, மானாவாரி விவசாய நிலங்களில் மண் மாதிரி எடுத்து இலவச பரிசோதனை செய்கின்றனர். இதில் மண்ணில் உள்ள உப்பு, கார, அமில சத்துக்கள் கண்டறியப்படுகிறது. இரண்டு ஆண்டுகளில் 22 ஆயிரம் மண் பரிசோதனை செய்து, ஆய்வு முடிவு விவசாயிகளுக்கு மண் வள அட்டைகளில் வழங்கப்படும்.

கடந்தாண்டில் 12 ஆயிரம் மாதிரிகளுக்கு இலக்கு நிர்ணயித்து, 10ஆயிரம் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. வேளாண் அதிகாரிகள் விவசாய நிலங்களுக்கு நேரிடையாக சென்று மானாவாரியில் 10 எக்டேருக்கு ஒரு மாதிரி, இறவையில் 2.5 ஏக்கருக்கு ஒரு மாதிரி வீதம் சேகரிக்கின்றனர். சேகரிக்கப்படும் மண்ணில் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் போன்ற பேரூட்ட சத்துக்கள், கால்சியம், துத்தநாகம் உள்ளிட்ட நுண்ணூட்ட சத்துக்கள், மக்னீசியம், போரான், சல்பேட் அளவு உள்ளிட்ட 12வகையான பரிசோதனைகள் செய்யப்படுகிறது.

நைட்ரஜன் குறைவு10 ஆயிரம் மாதிரிகளை பரிசோதனை செய்ததில் மலைப்பகுதியை ஒட்டியுள்ள போடி, அகமலை, கடமலைக்குண்டு பகுதி நிலங்களில் நைட்ரஜன் சத்து குறைவாக உள்ளது தெரிய வந்துள்ளது. ஒரு ஏக்கரில் நைட்ரஜன் 118 கிலோவிற்கு அதிகமாக இருக்க வேண்டும். ஆனால் இப்பகுதியில் ஏக்கருக்கு 90 கிலோ அளவில் மட்டும் உள்ளது. இக்குறைபாடு உள்ள நிலத்தில் விளையும் பயிர் போதியவளர்ச்சி இருக்காது. பச்சையம் குறைவாக இருக்கும். இதனால் மகசூல் பாதிக்கும். இக் குறையை சரிசெய்ய இயற்கை உரமான எரு, மண்புழு உரம், பசுந்தாள் உரம் ஆகியவற்றை அதிகம் பயன்படுத்த வேண்டும். பொட்டாஷ் அதிகம்

விளை நிலத்தில் ஏக்கருக்கு 112 கிலோவிற்கு மேல் பொட்டாஷ் இருந்தால் அதிகளவு பொட்டாஷ் உள்ள நிலமாகும். ஏக்கருக்கு 48 கிலோவிற்கு மேல் இருந்தால் பொட்டாஷ் அளவு நடுத்தரமாக உள்ளது என கணக்கிடுகின்றனர். மாவட்டத்தில் 50 சதவீத நிலத்தில் பொட்டாஷ் சத்து அதிகம் உள்ளது. இதனால் பொட்டாஷ், மீட்டோ பொட்டாஷ் உர பயன்பாடு குறைத்து கொள்ளலாம். மண் மாதிரிகள் சேகரிப்பு, ஆய்வு பணியினை மாவட்ட மண்வள பாதுகாப்பு உதவி இயக்குனர் முத்துலட்சுமி, தலைமை வேளாண் அலுவலர் பூங்கோதை மேற்கொண்டுள்ளனர்.

## மக்காச்சோள மகசூலில் மாநில முதலிடம் மத்திய அரசு விருதிற்கு தேனி விவசாயி தேர்வு

தேனி:மக்காச்சோள மகசூலில், மாநில முதலிடம் பெற்ற தேனி விவசாயி பெத்தனனுக்கு, மத்திய அரசின் "கிரிஷி கர்மான்' விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

போடி அருகே மீனாட்சிபுரத்தை சேர்ந்த விவசாயி பெத்தனன், 52. இவர் கடந்தாண்டு மக்காச்சோள சாகுபடியில் ஏக்கருக்கு அதிக மகசூல் எட்டி, மாநில முதலிடம் பிடித்தார். மத்திய அரசின் விருதிற்கு தேர்வாகி உள்ளார்.

பெத்தனன் கூறுகையில், " எனக்கு சொந்தமாக 2 ஏக்கர் நிலம் உள்ளது. கடந்தாண்டு வேளாண் அதிகாரிகளின் ஆலோசனைப்படி மக்காச்சோளம் சாகுபடி செய்தேன். விவசாய செலவு அதிகம் ஏற்பட்டாலும், அதை ஈடுகட்டும் வகையில் அதிக மகசூல் கிடைத்தது. இதன் மூலம் மாநில அளவில் முதலிடம் பெற்று மத்திய அரசின் விருதிற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சியாக உள்ளது,"என்றார்.

வேளாண் இணை இயக்குனர் வெங்கட சுப்பிரமணியன் கூறுகையில், "" மாவட்டத்தில் கடந்தாண்டு 7,267 எக்டேரில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது, 8,288 எக்டேராக உள்ளது. இதன் மூலம் கடந்தாண்டை விட 1,021 எக்டேர் சாகுபடி பரப்பளவு அதிகரித்துள்ளது. மீனாட்சிபுரம் விவசாயி பெத்தனன், மக்காச்சோள சாகுபடியில் ஏக்கருக்கு 8,333 கிலோ அதிகளவு மகசூல் எட்டி, மாநில அளவில் முதலிடம் பெற்றார். மத்திய அரசின் "கிரிஷி கர்மான்' விருது பெறுவதற்கு தேர்வாகி உள்ளார். தமிழக அளவில் உணவு உற்பத்தியில் கடந்த 3 ஆண்டுகளாக தேனி மாவட்டம் முதலிடம் பெற்று வருகிறது," என்றார்.

## தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கடந்த ஜூலை முதல் வழங்க அரசு வலியுறுத்தல்

மூணாறு:தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு கடந்தாண்டு ஜூலை முதல் ஊதிய உயர்வை வழங்குமாறு அரசு வலியுறுத்தி உள்ளது.

கேரளாவில் தேயிலை, ஏலம், காபி, ரப்பர் போன்ற தோட்டங்களில் 3.5 லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இவர்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.

அதன்படி 2014 டிசம்பரில் ஊதிய ஒப்பந்தம் நிறைவு பெற்றதால், 2015 ஜனவரியில் ஊதிய உயர்வு அளித்து, புதிய ஒப்பந்தமிட வேண்டும். ஆனால் ஊதிய உயர்வு குறித்து அரசு ஏற்படுத்தியுள்ள பி.எல்.சி.,யில், தோட்ட நிர்வாகத்தினருடன் பலமுறை பேச்சு வார்த்தை நடத்தியும் தீர்வு ஏற்படவில்லை.

ஆகவே ஊதிய உயர்வு கோரி இத்தொழிலாளர்களின் அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் கடந்தாண்டு செப்.30 முதல் அக்.,14 வரை வேலை நிறுத்தம் நடத்தினர்.

அப்போது கேரளா தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஷிபுபேபிஜான் தலைமையில் நடந்த பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டது.

அதன்படி தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு கிடைத்து வந்த ஊதியம் ரூ. 232ல் இருந்து ரூ. 300 ஆக உயர்த்தப்பட்டது. கடந்த நவம்பர் முதல் புதிய ஊதியம் நடைமுறைக்கு வந்தது.

தொழிலாளர்களுக்கு 2015 ஜனவரி முதல் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்பதால், அன்றைய தேதி முதல் புதிய ஊதிய ஒப்பந்தபடி உயர்த்தப்பட்ட தொகையை வழங்கக்கோரி, தொழிற்சங்கத்தினர், தோட்ட நிர்வாகத்தினருடன் கடந்த மூன்று மாதங்களாக தொடர்ந்து பேச்சு நடத்தினர்.

இதில் எவ்வித தீர்வும் ஏற்படவில்லை. இந்நிலையில் உயர்த்தப்பட்ட ஊதியத்தை தொழிலாளர்களுக்கு கடந்த ஜூலை முதல் வழங்கவும், இதனை வரும் ஜூலை 31ம் தேதிக்குள் வழங்குமாறும் அரசு வலியுறுத்தி உள்ளது.

பல்வேறு சலுகைகளை வழங்க அரசு முன் வந்த பிறகு, ஊதிய உயர்வுக்கு சம்மதித்த தோட்ட நிர்வாகத்தினர், தற்போது அரசின் அறிவிப்பை ஏற்பார்களா என்ற சந்தேகம் தொழிலாளர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

## மீன்வளர்ப்பு பயிற்சி

வத்திராயிருப்பு:வத்திராயிருப்பு வட்டார வேளாண்மைத்துறையின் சார்பில் விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக எஸ்.கொடிக்குளத்தில் பண்ணை குட்டையில் மீன் வளர்ப்பு பயிற்சியளிக்கப்பட்டது. மீன்வள ஆய்வாளர் குமரேசன் முன்னிலை வகித்தார். தொழில்நுட்ப மேலாளர் வனஜா வரவேற்றார். ஏற்பாடுகளை தொழில்நுட்ப மேலாளர்கள் சுரேஷ்குமார், அருண்குமார் செய்தனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோவை மாவட்டத்தில் 2 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போட திட்டம்



கோவை: கோவை மாவட்டத்தில் உள்ள புறக்கடை கோழிகளுக்கு தடுப்பூசி முகாம் வரும் வரும் 9ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடக்கிறது. இந்த முகாமில் 2 லட்சம் கோழிகளுக்கு தடுப்பூசி போட கிட்டமிடப்பட்டுள்ளது. கோழிகளுக்கு ஏற்படும் கோழிக்கழிச்சல் நோய் கோழிகளில் அதிக இறப்பை ஏற்படுத்தும் நோய்களில் முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. இந்த நோய்களில் இருந்து கோழிகளை பாதுகாக்க கால்நடை நிலையங்கள் மற்றும் கிளைநிலையங்களில் வாரந்தோறும் குறிப்பிட்ட நாளில் தடுப்பூசி போடப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் கோழிக்கழிச்சல் நோய்க்கான தடுப்பூசி முகாம் இரண்டு வாரங்கள் நடத்தப்படுகிறது.

அதன்படி, இந்த ஆண்டிற்கான தடுப்பூசி முகாம் வரும் பிப்ரவரி 9ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடக்கிறது. இதற்கு சென்னை ராணி பேட்டை கால்நடை நோய்தடுப்பு நிலையத்தில் இருந்து 2 லட்சத்து 800 டோஸ் மருந்துகள் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த தடுப்பூசிகள் கால்நடை மருத்துவமனைகள், 24 ஊரக கால்நடை மருந்தகங்கள், 12 பெரு மருத்துவமனைகள் மற்றும் 22 கிளைகள், ஒரு பன்முக மருத்துவமனைகள் மூலமாக கோழிகளுக்கு போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகள் காலை, மாலை நேரங்களில் கோழிகளுக்கு போடப்படும் என கால்நடை பராமரிப்பு துறையினர் தெரிவித்தனர்.

## கர்நாடகா புது மஞ்சள் வரத்து கிலோவுக்கு ரூ.10 கூடுதல் விலை

ஈரோடு : ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டிற்கு கர்நாடகா மஞ்சள் வரத்து துவங்கியது.

இந்திய அளவில் மஞ்சள் விற்பனையில் இரண்டாம் இடத்தை பெற்றுள்ள ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டிற்கு தமிழகம் மட்டுமின்றி கர்நாடக மாநிலம் நஞ்சன்கூடு, குண்டல்பேட்டை, சாம்ராஜ்நகரம், மைசூர், மாண்டியா போன்ற பகுதிகளில் இருந்தும் மஞ்சள் மூட்டைகள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது.

கர்நாடகாவில் கணிசமான அளவில் மஞ்சள் விளைந்த போதிலும் அங்கு விற்பனை செய்யும் வசதி இல்லாததால் ஈரோடு தனியார் மஞ்சள் மார்க்ெகட்டிற்கே பெரும்பாலான விவசாயிகள் மஞ்சளை விற்பனை செய்வதற்காக கொண்டு வருகின்றனர். வழக்கமாக கர்நாடகாவில் டிசம்பர் இறுதியில் மஞ்சள் அறுவடை முடிந்து மஞ்சளை வேக வைத்து பாலீஷ் செய்து ஜனவரி மாத இறுதியில் இருந்து விற்பனைக்காக தமிழகத்திற்கு கொண்டு வருவார்கள். கர்நாடக மஞ்சள் வரத்து துவங்கிய பிறகே தமிழகத்தின் புதுமஞ்சள் வரத்து துவங்கும். எனவே கர்நாடக மஞ்சள் வரத்து என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்த ஆண்டு கர்நாடகாவில் அறுவடை முடிந்து பாலீஷ் செய்த மஞ்சள் விற்பனைக்காக கொண்டு வருவதில் சற்று காலதாமதம் ஏற்பட்டது. இருப்பினும், தற்போது கர்நாடகாவில் இருந்து புதுமஞ்சள் வரத்தாக துவங்கியுள்ளதால் இனி மஞ்சள் சீசன் துவங்கியதாக கணக்கில் எடுத்து கொள்ளலாம் என விவசாயிகள் கூறுகின்றனர்.

நேற்று கர்நாடகாவில் இருந்து ஈரோடு செம்மாம்பாளையம் தனியார் மஞ்சள் மார்க்கெட்டிற்கு 500 மூட்டை புதுமஞ்சள் வரத்தானது. கடந்த சில நாட்களாக பழைய மஞ்சள் விலை குவின்டாலுக்கு ரூ.1500 வரை விலை குறைந்து காணப்பட்ட நிலையில் நேற்று புதுமஞ்சள் வரத்து காரணமாக மஞ்சள் விலை சற்று உயர்ந்து காணப்பட்டது.

வெளிமார்க்ெகட்டில் புது விரலி மஞ்சள் குவின்டால் அதிகபட்சமாக ரூ.9888 ஆகவும், குறைந்தபட்சம் ரூ.8419 ஆகவும், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக ரூ.9177க்கும், குறைந்தபட்சம் ரூ.8029 ஆகவும் விலை இருந்தது. அதேசமயம் பழைய மஞ்சள் மூட்டைகளை பொறுத்தவரை ஒரு குவின்டால் விரலி அதிகபட்சமாக ரூ.9750ம் குறைந்தபட்சமாக ரூ.7899க்கும், கிழங்கு அதிகபட்சம் ரூ.9217க்கும், குறைந்தபட்சம் ரூ.7459க்கும் விலை போனது.

அரசு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் அதிகபட்சமாக விரலி ரூ.9495க்கும், குறைந்தபட்சம் ரூ.7866க்கும், கிழங்கு அதிகபட்சமாக ரூ.9455க்கும் குறைந்தபட்சமாக ரூ.7605க்கும் விலை போனது.

பழைய மஞ்சளை விட புதுமஞ்சள் விலை கிலோவிற்கு ரூ.10 வரை அதிகமாக கிடைத்ததால் புதுமஞ்சளை விற்பனை செய்ய வந்த விவசாயிகள் உற்சாகம் அடைந்தனர். இருப்பினும், புதுமஞ்சள் வரத்து அதிகரித்தால் விலை குறைவதற்கான வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

## உலக வங்கி நிதியுதவியுடன் திருமூர்த்தி அணை ரூ.4 கோடியில் சீரமைப்பு

உடுமலை : உடுமலை அருகே உள்ளது திருமூர்த்தி அணை.பிஏபி தொகுப்பு அணைகளில் ஒன்றான இதன் மூலம் திருப்பூர்,கோவை மாவட்டங்களில் 3.75லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

இந்த அணையின் உட்புற சுவற்றில் பதிக்கப்பட்டிருந்த அலைக்கற்கள் சரிந்து விழுந்து கிடந்தன. அவற்றை சரிபடுத்தும் பணி தற்போது நடந்து வருகிறது. அதோடு அணையின் இருபக்கவாட்டு சுவர்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. அணையின் முன்பக்க சரிவில் மண் சரிந்த பகுதிகளில் புதிய மண் போட்டு செப்பனிடப்பட்டு வருகிறது.

உலக வங்கி அளிக்க ரூ.4 கோடி நிதியுதவியில் இப்பணி நடக்கிறது, உலக வங்கி அதிகாரி மேற்பார்வையில் இப்பணி நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

பாரத ஸ்டேட் வங்கி சார்பில் விவசாய கடன் தீர்வு மற்றும் பயிர் கடன் புதுப்பித்தல் முகாம்

கோவை, : திருப்பூர் மாவட்டம் உடுமலையை அடுத்த வாளவாடியில் பாரத ஸ்டேட் வங்கி (ஏடிபி) விவசாய பிரிவு கிளையின் சார்பில் மாபெரும் விவசாய கடன் தீர்வு மற்றும் பயிர் கடன் புதுப்பித்தல் முகாம் நடந்தது. இதில் கோவை மண்டல துணை பொதுமேலாளர் ரமேஷ், கோவை மண்டல உதவி மேலாளர் பிரதீப் உட்பட பலர் கலந்து கொண்டனர். இம்முகாமில் 73 விவசாயிகள் ரூ.84 லட்சத்திற்கு பயிர்கடனைபுதுப்பித்தார்கள்.

மேலும், 11 விவசாயிகளின் ரூ.38 லட்சத்துக்கு கடன் தீர்வு

செய்யப்பட்டது. மேலும், 3 விவசாயிகளுக்கு ரூ.28 லட்சம் மதிப்பில் புதிய டிராக்டர்களுக்கு கடன் வழங்கப்பட்டது. மேலும், வேளாண் விளை பொருள் விற்பனை கடனாக 15 விவசாயிகளுக்கு ஒரு கோடி வரை கடன் வழங்கப்பட்டது. இறுதியாக பாரத ஸ்டேட் வங்கி(ஏடிபி விவசாய பிரிவு) கிளையின் மேலாளர் ரங்கராஜ் நன்றியுரை ஆற்றினார்.

கோடை சீசனுக்காக மரவியல் பூங்காவில் நாற்று நடவு பணி துவக்கம்

ஊட்டி : வரும் கோடை சீசனுக்கு தயார்படுத்தும் வகையில் ஊட்டி மரவியல் பூங்காவில், பல்வேறு வண்ண மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டுவருகின்றன.

ஊட்டியில் ஆண்டுதோறும் நிலவும் குளு குளு காலநிலையை அனுபவிக்க இந்தியா முழுவதிலிருந்தும், வெளிநாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டிக்கு நாள்தோறும் வருகின்றனர்.

அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகள் தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, மரவியல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு சுற்றுலா தளங்களை பார்த்து மகிழ்கின்றனர். கோடை சீசன் சமயத்தில் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்கும் வகையில் மலர் கண்காட்சி, ரோஜா கண்காட்சி உள்ளிட்ட பல்வேறு வகையான நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு கோடை சீசனுக்காக ஊட்டியில் உள்ள சுற்றுலா தளங்கள் தயாராகி வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக தாவரவியல் பூங்காவில் சுமா◌ா◌் 2.50 லட்சம் பல வண்ண மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. ரோஜா பூங்காவில் ரோஜா செடிகள் அனைத்தும் கவாத்து செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் ஊட்டி மான் பூங்கா அருகே 1.58 எக்டர் பரப்பளவில் அமைந்துள்ள மரவியல் பூங்காவும் சீசனுக்காக தயாராகி வருகிறது. பூங்காவில் நீலகிரி மாவட்ட மரங்களான காட்டு நாவல் மரம், தவிட்டு பழம், விக்கிபழம் மற்றும் வெளி நாட்டு மரங்கள் என பல வகையான மரங்கள் உள்ளன. மலர் செடிகள் நடவு பணிக்காக

பூங்காவில் உள்ள பாத்திகளில் உரமிட்டு தயார் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது நாற்று நடவு பணிகள் துவங்கியுள்ளது. மேரிகோல்டு, பெட்டூனியா, டெய்சி உள்ளிட்ட பல்வேறு வண்ண மலர் செடிகள் நடவு செய்யப்பட்டு வருகின்றனர்.

## பசும் தேயிலைக்கு குறைந்தபட்ச விலை ரூ.15 தேயிலை வாரிய துணை இயக்குனர் தகவல்

மஞ்சூர் : தென்னிந்திய தேயிலை வாரிய துணை இயக்குனர் ஹரிபிரகாஷ் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பச்சை தேயிலைக்கு பிப்ரவரி மாதத்திற்கு குறைந்தபட்ச கொள்முதல் விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.15 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த விலையை அனைத்து தொழிற்சாலைகளும் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். மேற்படி விலை வழங்காத தொழிற்சாலைகள் குறித்து விவசாயிகள் தேயிலை வாரியத்திற்கு தகவல் தெரிவிக்கலாம்.

மேலும் இதுகுறித்து தேயிலை வாரியத்தின் வளர்ச்சி அலுவலர்கள், தொழிற்சாலை ஆலோசனை அதிகாரிகள், துணை இயக்குனர்கள் விவசாயிகளுக்கு குறைந்தபட்ச விலை வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## திருச்செந்துறையில் 1,243 வாழைத்தார் ஏலம்

திருச்சி, : திருச்செந்துறையில் 1,243 வாழைத்தார் ரூ.46,820க்கு ஏலம் போனது. • ரங்கம் தாலுகா திருச்செந்துறை கிராமத்தில் அமைந்துள்ள வாழை வணிக வளாகத்தில் நேற்று வாழைத்தார் ஏலம் நடந்தது. சிறுகாம்பூர், கிளியநல்லூர், செங்குடி ஆகிய கிராமங்களில் இருந்து 16 விவசாயிகள் வாழைத்தார்களுடன் ஏலத்தில் கலந்து கொண்டனர். இதேபோல் ஜீயபுரம், நெய்தலூர், ஏர்போர்ட், பெட்டவாய்த்தலை, உறையூர், கே.கே.நகர், அண்ணாநகர் ஆகிய பகுதிகளில் இருந்து 12 வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். இதில் மொத்தம் 1,243 வாழைத்தார்கள் ரூ.46,820க்கு ஏலம் போனது. அதிகபட்சமாக ரஸ்தாலி

தார் ரூ.250, பூவன் ரூ.150, மொந்தன் ரூ.150, பச்சலாடன் ரூ.100, கற்பூர வள்ளி ரூ.70க்கு ஏலம் போனது. அடுத்த ஏலம் வரும் 9ம் தேதி நடைபெற உள்ளது. விவசாயிகள் நல்ல தரமான வாழைத்தார்களை ஏலத்திற்கு கொண்டு வந்து, நல்ல விலை பெற்று அதிக லாபம் பெறலாம் என வாைழ வணிக வளாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## மதிப்புக்கூட்டப்பட்ட பால் பொருள் தயாரிப்பு பயிற்சி

கரூர், : மதிப்புக் கூட்டப்பட்ட பால் பொருட்கள் தயாரிப்பது குறித்த இலவச பயிற்சிக்கு விண்ணப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கரூர் பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் வசந்தகுமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: கரூர் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் தூய்மையான பால் உற்பத்தி மற்றும் பால் பொருட்கள் தயாரிப்பு, குறித்த இலவச பயிற்சி வரும் 8ம்தேதி முதல் 10ம்தேதி வரை 3 நாட்களுக்கு நடத்தப்பட உள்ளது. இப்பயிற்சியில் தூய்மையான பால் உற்பத்தி, பாலின் தரத்தை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், பால் பதப்படுத்துதல், மதிப்புக்கூட்டிய பால் பொருட்கள், வியாபார உத்திகள், பால்பண்ணை பொருளாதாரம், வங்கிக்கடன் உதவி ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. மேலும் பயிற்சியாளர்களை நாமக்கல் கால்நடை மருத்துவகல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள கால்நடை உற்பத்தி பொருட்கள் மற்றும் தொழில்நுட்பத்துறை (பால்வளம்), சேலம் பால்பண்ணை ஆகிய இடங்களுக்கு சென்றுவர ஒருநாள் பட்டறிவு பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சியாளர்களுக்கு கையேடு, உணவு வழங்கப்படும். பயிற்சியில் கலந்துகொள்ள ஆர்வம் உள்ளவர்கள் அலுவலகத்தை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துகொள்ளுமாறும் மேலும் 3 நாட்களும் தவறாமல் பயிற்சியில் கலந்துகொள்ளுமாறும் மையத்தின் பேராசிரியர் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப பயிற்சிக்காக விவசாயிகள் தஞ்சைக்கு சென்றனர்

அரியலூர், : அரியலூர் மாவட்டம் தா.பழூர் வட்டார வேளாண்மை துறை சார்பில் விவசாயிகள் தொழில்நுட்ப பயிற்சிகளை தெரிந்து கொள்ளும் விதத்தில் ஆடுதுறையில் உள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி கழகம் மற்றும் தஞ்சையில் உள்ள இந்திய பயிர் பதன ஆராய்ச்சி நிலையத்தில் 3 நாள் பயிற்சியில் விவசாயிகள் பங்கேற்று தொழில்நுட்ப வல்லுனர்களின் ஆலோசனையை கேட்டு தெரிந்து கொள்கின்றனர். இதற்காக காரைக்குறிச்சியில் இருந்து புறப்பட்ட 40 விவசாயிகளை அட்மா தொழில்நுட்ப வல்லுனர் சகாதேவன், உஷா ஆகியோர் மேற்பார்வையில் அழைத்து சென்றனர்.

## அரியலூர் மாவட்டத்தில் 12 இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் திறக்க முடிவு

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் 12 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படவுள்ளது. இதுகுறித்து கலெக்டர் சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அரியலூர் மாவட்டத்தில் 2015-16ம் ஆண்டுக்கான சம்பா பருவத்தில் தற்போது அறுவடை பணிகள் நடந்து வருகிறது. இதையடுத்து விவசாயிகள் பயன்பெறும் வகையில் அரியலூர் மாவட்டத்தில் 12 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரியலூர் வட்டத்தில் கீழகாவட்டான்குறிச்சி, கரைவெட்டி, வெங்கனூர், விளாகம், பளிங்காநத்தம், கோவில் எசனை, தேளூர், விழுப்பணங்குறிச்சி, ஓரியூர் ஆகிய கிராமங்கள். செந்துறை வட்டத்தில் ஆர்.எஸ்.மாத்தூர், குழுமூர் ஆகிய கிராமங்கள். உடையார்பாளையம் வட்டத்தில் ஆண்டிமடம் கிராமத்தில் திறப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பயன்படுத்தி கொள்ளலாம்.

**களைக்கொல்லிக்கு 50 சதவீத பின்னேற்பு மானியம்**

பட்டுக்கோட்டை,: உளுந்து மற்றும் நிலக்கடலை பயிரில் களைக்கொல்லி பயன்படுத்தும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: நடப்பு ராபி பருவத்தில் கோட்டக்கால் நிலங்களிலும், சம்பா நெற்பயிர் அறுவடை செய்யப்படும் இடங்களிலும் உளுந்து மற்றும் நிலக்கடலை விதைப்பு செய்யும் பொழுது அளவிற்கு அதிகமான களை செடிகள் மண்டி வளர வாய்ப்புள்ளது. இந்த களைச் செடிகள் பல்மடங்கு பெருகி வளர்ந்து தானிய வகை பயிர்களுக்கு பெரும் தீங்கு விளைவிக்கிறது. இடும் நீர் மற்றும் உரச்சத்துகளை 30-40 சதம் வரை களைகள் எடுத்துக் கொள்கிறது. இதனால் தானியப் பயிர்களான உளுந்து மற்றும் நிலக்கடலை பயிரில் 25-30 சதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதனை உணர்ந்த மத்திய, மாநில அரசுகள் களைச் செடிகளை கட்டுப்படுத்த களைக்கொல்லி பயன்படுத்துவதற்கு 50 சதவீத மானியம் அறிவித்துள்ளது. இதன்படி விவசாயிகள் உளுந்து மற்றும் நிலக்கடலை பயிர்களுக்கென்று பிரத்யேகமாக தயாரிக்கப்படும் தேவைக்கேற்ற களைக்கொல்லிகளை பயன்படுத்தினால் 50 சத அரசு மானியம் வழங்கப்படும். இதற்கு விவசாயிகள் அருகாமையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தனியார் விற்பனை மையங்களில் களைக்கொல்லி மருந்துகளை ரொக்க விலைக்கு பெற்று, ரொக்க ரசீது பட்டியலுடன் உங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலரை சந்தித்து முறையான மானிய பரிந்துரை விண்ணப்பம் பெற்று, உளுந்து மற்றும் நிலக்கடலை சாகுபடி செய்துள்ளமைக்கான சான்றாவனம், ரேசன் கார்டு ஜெராக்ஸ் நகல், ஆளறிகல் குறித்த போட்டோ, ஆதார் அடையாள எண், வங்கி பாஸ்புத்தகத்தின் ஜெராக்ஸ் நகல் ஆகிய ஆவணங்களை விரிவாக்க அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அலுவலக கூர்ந்தாய்வு மற்றும் பரிசீலனைக்கு பின்னர் களைக்கொல்லி மருந்தின் மொத்த மதிப்பில் 50 சதம் (அல்லது) எக்டேருக்கு ரூ.500 இதில் எது குறைவோ அது மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் பின்னேற்பு மானியமாக

வரவு வைக்கப்படும். உளுந்து பயிருக்கு தேசீய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஒரு விவசாயி 2 எக்டேரும், நிலக்கடலை பயிருக்கு தேசிய எண்ணெய் வித்துக்கள் மிஷன் 1 திட்டத்தின் கீழ் 1 எக்டேருக்கும் மான்யம் பெற தகுதி உடையவர்கள் ஆவர். மேற்படி கிட்டங்களின் கீழ் மானியம் பெற விரும்பும் விவசாயிகள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்கள் (அல்லது) திருவோணம் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

## உழவர் மன்றங்களுக்கு சிறப்பு பயிற்சி

திருத்துறைப்பூண்டி, : திருத்துறைப்பூண்டி அருகே மேட்டுப்பாளையத்தில் உள்ள நம்பிக்கை தொண்டு நிறுவனத்தில் நபார்டு வங்கியின் அங்கீகாரம் பெற்ற உழவர் மன்றங்களுக்கான சிறப்பு பயிற்சி நடந்தது. நபார்டு வங்கியின் உதவி பொது மேலாளர் ரவிசங்கர் தலைமை வகித்தார். நம்பிக்கை தொண்டு நிறுவன திட்ட மேலாளர் விஜயா வரவேற்றார். பயிற்சியில் திருவாரூர் மாவட்ட விவசாய விற்பனை துணை இயக்குநர் மனோகரன், சாலியமங்கலம் வேணுகோபால், இயற்கை விவசாயி கரிகாலன், விவசாய அலுவலர் ராஜேந்திரன், மருதூர் கிருஷ்ணமூர்த்தி, தொண்டு நிறுவன இயக்குநர் சவுந்தராஜன் ஆகியோர் பேசினர். பாண்டி, கீழநம்மகுறிச்சி, கள்ளுக்குடி, ஆலத்தம்பாடி, பின்னத்தூர் பகுதியில் உள்ள உழவர் மன்றங்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். ஒருங்கிணைப்பாளர் வள்ளி நன்றி கூறினார்.

## ரெட்டியார்சத்திரம் அருகே 200 ஏக்கரில் சுண்டல் சாகுபடி

செம்பட்டி, : ரெட்டியார்சத்திரம் அருகே 200 ஏக்கரில் விவசாயிகள் சுண்டல் பயிரிட்டுள்ளனர் .ரெட்டியார்சத்திரம் அருகே கரிசல் பூமியான கரிசல்பட்டி, கோனூர், அனுமந்தராயன்கோட்டை, தருமத்துப்பட்டி, கசவனம்பட்டி பகுதியில் சுண்டல் பயிர் விவசாயிகள் அதிகம் உள்ளனர்.

இவர்கள் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக சுண்டல் பயிரை (கொண்டைக் கடலை) பயிரிட்டு வருகின்றனர். கார்த்திகை மாதம் பயிரிட்டிருந்த சுண்டல் பயிர் தற்போது நன்கு வளர்ந்து காய்த்துள்ளது. ஆனால் புழுக்களின் தாக்குதலில் இருந்து பயிரை காப்பாற்ற விவசாயிகள் பூச்சிக் கொல்லி மருந்து அடித்து வருகின்றனர்.

கோனூர்,கரிசல்பட்டி, அனுமந்தராயன்கோட்டை பகுதியில் பச்சை கம்பளம் விரித்தது போல் சுண்டல் பயிர் செடிகள் பசுமையாக உள்ளன.இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், எங்கள் பகுதியில் 200 ஏக்கரில் சுண்டல் பயிரிட்டுள்ளோம். சுண்டல் பயிர் பனியில் மட்டும் விளையக் கூடிய பயிராகும். குறிப்பாக கரிசல் பூமி ஈரப்பதத்தை அதிகநாள் தாக்குப்பிடிக்கும் என்பதற்காக கரிசல் மண்ணில் சுண்டல் பயிர் நன்கு விளையும். மற்ற பயிர்களை போல் சுண்டல் பயிருக்கு தண்ணீர் பாய்ச்ச தேவையில்லை என்பதால், இப்பகுதியில் அதிகளவில் பயிரிடுகிறோம் என்றனர்.

## தூத்துக்குடி மீன்வள ஆராய்ச்சி நிலையத்தை பொதுமக்கள் பார்வை

தூத்துக்குடி: தூத்துக்குடி மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தை பொதுமக்கள் பார்வையிட்டனர்.தூத்துக்குடி மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் தெற்கு கடற்கரை சாலையில் ரோச் பூங்கா அருகில் அமைந்துள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையம் 1947ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ம் தேதி தொடங்கப்பட்டது. இதனை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 3ம் தேதி பொதுமக்கள் மற்றும் மாணவர்கள், தொழில்முனைவோர்கள் பார்வைக்காக மீன்வள ஆராய்ச்சி நிலையம் திறந்துவைக்கப்படும்.

அதன்படி பிப்.3ம் தேதியான நேற்று காலை முதல் மாலை வரையில் இந்த ஆராய்ச்சி நிலையம் மாணவ மாணவியர் பார்வைக்காக திறக்கப்பட்டது.இதனை பார்வையிட மாணவ மாணவியர் ஆர்வமுடன் குவிந்தனர். இதனை மாநகராட்சி கமினர் பூங்கொடி அருமைக்கண்

துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் மீன்வளக்கல்லூரி முதல்வர் சுகுமார், விஞ்ஞானி ஜெகதீஷ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். இங்கு பதப்படுத்தி வைக்கப்பட்டுள்ள மீனினங்கள் உள்ளிட்ட கடல்வாழ் உயிர்கள், அரியவகை கடல் விலங்குகளை பார்வையிட்டு சந்தேகங்களை கேட்டு தெரிந்து கொண்டனர். மேலும் அவர்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் மீன் வளங்கள் குறித்த வீடியோ பட காட்சிகளும் திரையிடப்பட்டன. இதனை ஆர்வமுடன் மாணவ மாணவியர் பார்த்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மாநில அரசுகளுடன் ரெயில்வே கூட்டு நிறுவனம்: கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ.400 உயர்வு மத்திய மந்திரிசபை ஒப்புதல்

புதுடெல்லி,

கொப்பரை தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.400 உயர்கிறது. மாநில அரசுகளுடன் ரெயில்வே இணைந்து கூட்டு நிறுவனம் தொடங்கும். இதற்கான ஒப்புதலை மத்திய மந்திரிசபை வழங்கியது.

<u>கூட்டு நிறுவனம்</u>

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய மந்திரிசபை கூட்டம் நேற்று நடந்தது. இதில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன. முக்கியமாக, ரெயில்வே திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாநில அரசுகளுடன் ரெயில்வே சேர்ந்து கூட்டு நிறுவனங்களை தொடங்க ஒப்புதல் வழங்கப்பட்டது.

இது தொடர்பாக மத்திய எரிசக்தி, நிலக்கரி, மரபுசாரா எரிசக்தி துறை ராஜாங்க மந்திரி பியுஷ் கோயல் நிருபர்களிடம் பேசுகையில், ''பங்கு முதலீட்டு பொறுப்புடன் ரெயில்வே அமைச்சகமும், சம்பந்தப்பட்ட

மாநில அரசுகளும் சேர்ந்து இந்த கூட்டு நிறுவனங்களை தொடங்கும். ஒவ்வொரு நிறுவனமும் ஆரம்பத்தில் செலுத்திய பங்கு மூலதனமாக ரூ.100 கோடியை கொண்டிருக்கும். இதில் ரெயில்வே அமைச்சகம் ரூ.50 கோடியையும், மாநில அரசு ரூ.50 கோடியையும் பங்கு மூலதனமாக செலுத்தும்'' என கூறினார்.

<u>கொப்பரை தேங்காய்</u>

கொப்பரை தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது.

இதன்படி, அரவை கொப்பரைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.5,950 ஆக உயர்கிறது. இது கடந்த ஆண்டை விட ரூ.400 அதிகம்.

இதேபோன்று பந்து கொப்பரைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.6,240 ஆக அதிகரிக்கிறது. இது சென்ற ஆண்டை விட ரூ.410 கூடுதல் ஆகும்.

கொப்பரை தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி இருப்பதால், கொப்பரை தேங்காய் உற்பத்தி பெருகும் என மத்திய மந்திரி பியுஷ் கோயல் கூறினார்.

விவசாய செலவுகள் மற்றும் விலை ஆணையத்தின் சிபாரிசை ஏற்றுத்தான், கொப்பரை தேங்காய்க்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்த முடிவு எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

<u>புதிய பதவி</u>

இந்திய விமானப்படையில், ஏர் மார்ஷல் அந்தஸ்தில் 2014–ம் ஆண்டு டிசம்பர் 1–ந் தேதி முதல் 2016–ம் ஆண்டு ஏப்ரல் 30–ந் தேதி வரையிலான 17 மாத காலத்துக்கு கூடுதலாக ஒரு பதவியை ஏற்படுத்துவதற்கு மத்திய மந்திரிசபை ஒப்புதல் அளித்தது.

டெல்லியில் உள்ள பாதுகாப்பு படைகளின் தீர்ப்பாயம் (முதன்மை அமர்வு) பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் இந்த நியமனம் செய்யப்படுவதாக பியுஷ் கோயல் தெரிவித்தார்.

ஐ.ஜி.எஸ்.டி.சி. என்றழைக்கப்படக்கூடிய இந்தோ ஜெர்மன் அறிவியல், தொழில் நுட்ப மையத்தின் ஆயுள் காலத்தை 2017–ம் ஆண்டில் இருந்து 2022–ம் ஆண்டுவரை மேலும் 5 ஆண்டுகள் நீட்டிக்க மத்திய மந்திரிசபை ஒப்புதல் வழங்கியது.

இன்ஸ்ட்ரூமென்டேசன் லிமிடெட் என்ற நிறுவனத்தில் இருந்து ராஜஸ்தான் மின்னணு, கருவிமயமாக்கல் நிறுவனம் என்ற தனி லாபம் ஈட்டும் நிறுவனம் தொடங்குவதற்கு பிரதமர் மோடி தலைமையில் கூடிய பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய மந்திரிகள் குழு ஒப்புதல் அளித்தது.

**தூத்துக்குடியில் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தை மாணவ – மாணவிகள் பார்வையிட்டனர்**



தூத்துக்குடி,

தூத்துக்குடியில் மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தை பள்ளிக்கூட மாணவ–மாணவிகள் கண்டு ரசித்தனர்.

<u>ஆராய்ச்சி நிலையம்</u>

தூத்துக்குடியில், மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையம் 1948–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3–ந் தேதி மீன்வள கணக்கெடுப்பு நிலையமாக தொடங்கப்பட்டது. அந்த நிலையம் தொடங்கப்பட்டதை குறிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 3–ந் தேதி மீன்வள ஆராய்ச்சி நிலையம் நிறுவன தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இதையொட்டி, பிப்ரவரி 3–ந் தேதியன்று தூத்துக்குடி மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையத்தை பொதுமக்கள், பள்ளிக்கூட மாணவ–மாணவிகள் பார்வையிட அனுமதி அளிக்கப்பட்டது. அதன்படி நேற்று காலை முதல் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ–மாணவிகள், பொதுமக்கள் ஆராய்ச்சி நிலையத்துக்கு வந்தனர்.

அங்கு நடந்த நிகழ்ச்சிக்கு நிலைய தலைமை விஞ்ஞானி பி.பி.மனோஜ்குமார் தலைமை தாங்கினார். மீன்வளத்துறை இணை இயக்குனர் அமல்சேவியர், உதவி இயக்குனர் ஐசக் ஜெயக்குமார், கடலோர காவல்படை கமாண்டர் நாகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் பூங்கொடி அருமைக்கண், நிகழ்ச்சியை தொடங்கி வைத்து ஆராய்ச்சி பணிகளை பார்வையிட்டார்.

பார்வையிட்டனர்

இதைத்தொடர்ந்து மாணவ–மாணவிகள் பார்வையிட்டனர். சிப்பிகளை உருவாக்குதல், சிப்பிகளை பண்ணையில் வளர்த்தல், கடல் முத்துக்கள் உருவாக்குதல், கடல் சங்கு, கடல் அட்டைகளை குஞ்சு பொரிக்க வைத்தல், ஆழ்கடல் ஆராய்ச்சி, நுண்ணுயிர்களை வளர்த்தல், திசுக்கள் மூலம் உயிரின உருவாக்கம், மீன் அருங்காட்சியகம், உயிர் மீன் அருங்காட்சியகம் உள்ளிட்டவைகளை கண்டு ரசித்தனர். மீன்வளங்கள் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றிய படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது. ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மற்றும் மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர்.

## வரத்து குறைவால் திருச்சியில் பழ வகைகள் விலை ‘திடீர்’ உயர்வு



வரத்து குறைவால் திருச்சியில் பழ வகைகள் விலை திடீரென உயர்ந்தது.

ஆரஞ்சுபழம்

திருச்சிக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பழ வகைகள் வரத்து காணப்படுகிறது. மேலும் வெளிமாநிலங்களிலும் இருந்து பழங்கள் வரத்து உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஆரஞ்சு பழம் வரத்து அதிகமாக இருந்ததால் ஒரு கிலோ ரூ.30 வரைக்கும் விற்றது. தற்போது வரத்து குறைந்துள்ளதால் ஒரு கிலோ ரூ.40-க்கு விற்பனையாகிறது. இதேபோல ரூ.40-க்கு விற்ற சாத்துக்குடி கிலோ ரூ.50-க்குவிற்கிறது.

ஆப்பிளை பொறுத்தவரையில் பெரிய அளவில் விலை மாற்றம் இல்லை. டெல்லி ராயல் ஆப்பிள் கிலோ ரூ.120-க்கும், வாஷிங்டன் ஆப்பிள் ரூ.160-க்கும்விற்கிறது.

திராட்சைபழம்

நாட்டு மாதுளை பழம் கிலோ ரூ.90-க்கும், காபூல் ரூ.140-க்கும், சப்போட்டா ரூ.30-க்கும், அன்னாசி பழம் ரூ.30-க்கும் விற்பனையாகிறது. பச்சை திராட்சை ரூ.90-க்கும், கருப்பு திராட்சை ரூ.110-க்கும் விற்கிறது. சில்லறை கடைகளில் இவற்றின் விலைகளை விட சற்று கூடுதல் விலைக்கு விற்பனையானது. கடந்த வாரம் வரை பழ வகைகள் விலையில் ஏற்றம் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில் தற்போது திடீரென ரூ.5 முதல் ரூ.10 வரைக்கும் விலை அதிகரித்துள்ளது. தொடர்ந்து விலை ஏற வாய்ப்புள்ளதாக பழ வியாபாரிகள் தெரிவித்தனர்.